# C S I Moderator Visits Jaffna Diocese

The Most Rev. William Moses, the Moderator of the Church of South India visited Sri Lanka from 9th to 11th of April with his wife Mrs. Thevarani Moses and Mr. Fredrick William, the Treasurer of the CSI Synod. The main purpose of his visit was to declare open two new Homes in the Hill Country.

The Rt. Rev. Dr. S. Jebanesan, his wife Vimala Jebanesan, Mrs. Vasanthy Rajaratnam, Mr. A. Gnanathasan, Rev. Dr. Daniel Thiagarajah, Mr. N. S. P. Thampoe and the Rev. A. Jeeyakumaran gave the distinguished guests a warm welcome at the VIP Lounge of the Colombo airport.


# THE MORNING STAR

Registered as a Newspaper (Established 1841) published Every Friday

Vol 159 Jaffna Friday 23rd April 1999 No. 0

*RICHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A R... TO ANY PEOPLE*


## Opening of New Homes

The Moderator declared open two new Homes in Nuwera Eliya on the 10th April at two separate functions presided over by Bishop Jebanesan. Prinz Home for the Boys is located at Hawa Eliya where twelve boys have been taken in for support ... care. This Home is a ... Munchener Jugend ...g an organization ...ded by Mr Udo Prinz. Following the words of welcome by the Rev. Dr. Daniel Thiagarajah and the Rev. Sebastian Antony, the Bishop of the Jaffna Diocese invited the Moderator to declare open and bless the Home. The opening of Bishop Ambalavanar Memorial Girls' Home at Bambarakelle in the presence of large and distinguished gathering followed this function. The Moderator & party returned to Colombo at 1 . 00 p. m on Saturday the 10th April.

## Communion Service at C S I Church, Wellawatte

The Moderator preached at the Holy Communion Service on Sunday the 11th April. He preached on the Cross - of Jesus and the pleasure His followers have by emptying themselves. The learned Moderator said that the people of the Jaffna Diocese are able to take par in the anguish and the a_ony of the poor and the down trodden. In many countries cross is merely a theological exercise.

# Public Reception at Wellawatte

A Public reception was accorded to Moderator and party at the fellowship area after the Sunday morning service. The function was presided over by our Bishop. Rev. Duleep Fernando. President of the Methodist Conference and Chairperson of the National Christian Council, Mr. Varma of the Indian High Commission and Bishop Jebanesan welcomed the visitors from India. Mrs. Thevaranee Moses spoke on the role the women of Jaffna Diocese in the present difficult situation in Sri Lanka Mr. Frederic William, the Treasurer of the Syond said that it was his first visit to Sri Lanka and that he was happay that he had now visited all the 21 dioceses in the Synod. Moderator Wiliam Moses in his speech said that there was a big debate in 1947 whether the Jaffna Council of the SIUC should become part of the C S I. Now after 50 years when we look back at the history of the C S I. we realise that Jaffna Diocese has become an integral part of the Church of South India. After half a century of pilgrimage in unison we are unable to consider Jaffna Diocese as a foreign element.

The Church of South India, because of the difficult situation in Sri Lanka will always consider Jaffna Diocese as its Missionary Wing.

Mr. G Newton, the Secretary of the Colombo Church proposed a vote of thanks.

The Most Rev. William Moses & Mrs. Thevaranee Moses left for Madras on Sunday the 11th. The Bishop, Mrs. Jebanesan & Mr. N. S. P. Thampoe saw them off at the VIP Lounge of the Katunayake Airport. Mr. Frederic William, the Treasurer of the Synod left for Madras on Wednesday the 14th instant.

## Sevak Sam Alfred

### *An Apprecation*

It was with great sorrow that I received the news that Reverend Sam Alfred died in Jaffna Hospital on 26th January 1999, the day after rededicating of the buildings at the Christa Seva Ashram at Maruthanamadam. It was the last formal function and religious ceremony that he participated in, and he had to be transported from the hospital in an ambulance, to virtually hand over the work at the Ashram to the large assembly of people who had arrived at the Ashram to witness that historic event. The Ashram buildings and compound had

Contd to page 4

*The Morning STAR ONE Hundred Years AGO*

# NORTHERN RAILWAY

A great deal is being said in these days about the Northern railway, much of which is out of place at this late day. Objections should have been raised when project for a railway to the north was first mooted, but now after permission has been granted to construct part of the line it seems ill-timed, to say the least, to protest against it. We have always thought that the railway northwards should have been along the coast via Chilaw and Puttalam and connecting with the Indian line at Paumban. For the peninsula as electric tram - way would have answered every purpose. But since it has been decided to build a line through the center of the Island northwards, it seems fair to allow the scheme to have a trial. It is rumoured that the Governor is putting off the actual commencement of the work in the Jaffna peninsula, until he shall have been to England and conferred with the Secretary of the state for the Colonies. There need be no fear however that the sanction will be withdrawn It is only a question of gauge, a matter which will perhaps be submitted once more to the experts We shall be surprised if something very substantial is not accomplished during the year. In the meantime let us hope that "red tape" will not result in prolonging the time of construction beyond all reasonable limits.

(Ref M/s 19 -01 - 1899 )

## Rajan Kadirgamar TROPHY

St.Patricks College beat Jaffna College by 9 wickets at the 11th 50 over Annual encounter play ed at St.Patricks ground on 20. 3 99.

Batting frist, Jaffna College Scored 77 runs in 37 overs losing all wickets. St.Patricks which set a target of 78 runs to win scored 81 runs for 1 and won the Rajan Kadirgamar Challenge Trophy.

The Man of the Match Award was won by Mas. G R Thevarajan of St.Patricks College.

Other Winners were as follows

| | |
|---|---|
| Best Batsman | Mas Thevaharan S P C |
| Best Bowler | Mas Thevarajan S P C |
| Best Fielder | S Ninintharuban J C |
| Best All Rounder | Mas T Jeyadevaragavan S P C |
| Best Partnership | Mas T Jeyaragavan & M Thevaharan S P C |

## ASIA ALLIANCE of YMCAs General Secretary's Visit to Jaffna

Mr. Bartholomew Shaha, the General Secretary of the Asia Alliance of Y M C A's and Executive Secretary of NCY, Sri Lanka Mr. S. Vijyakulasingam were hosted at a breakfast by the Principal, Jaffna College Mr. G Rajanayagam on 21st of April 1999. Thereafter both Secretaries met the Regional Council (North) members at a meeting in Jaffna College.

## செயற்குழு முடிவுகள்

தென்னித்திய திருச்சபையின் செயற் குழுவின் கூட்டம் சென்ற 5ம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. அப்பொழுது பின் வரும் இட மாற்றங்கள் செய்யப்பட்டன.

மூளாய்
வண டி சி இரத்தினசிங்கம்
சத்தியபுரம்
திரு P தேவமித்திரன்
உடுப்பிட்டி
வண A K சுரேந்திரன்
மானிப்பாய்
வண T K குமரேசன்
சண்டிலிப்பாய்
சகோ ம ஜுட் சுதர்ஷன்
அராலி
திரு அ பிரான்சிஸ் சந்திரகுமார்
அராலி சேகரக்குரு அதி வண அறிவர் எஸ் ஜெபநேசன்
அணைக்கோட்டை காந்திஜி கிராமம்
வண G: D மைனசிலன்
குடத்தனை
சகோ அன்ரனி சுதாகர்
பண்டத்தரிப்பு
வண N. T ஜெயநேசன்
தெல்புரம்:
திரு N சத்தியமூர்த்தி
ஏழாலை வடக்கு:
வண மில்ரன் சொலமன்

## ஊழியர் ஐக்கிய விருந்து

இம் மாதம் 5ம் திகதி தென்னிந்திய சபையின் சகல ஊழியர்களுக்கும் ஓர் ஐக்கிய விருந்து பேராயர் இல்லத்தில் நடைபெற்றது. மறைந்துபோன திருமதி பத்மினி சுகுனானந்தன் பேரில் நடைபெற்ற இந்த நிகழ்வினை அருள் திரு D R அம்பலவாணர் ஜெபம் செய்து ஆரம்பித்து வைத்தார்:

## கல்லறையில் மலர்ந்த காவியம்

வன்னிப்பிரதேச தென்னிந்திய திருச்சபைகள் இணைந்து தயாரித்த 'கல்லறையில் மலர்ந்த காவியம்' எனும் நாடகம் 23-03-99 அன்று சுதந்திரபுரத்திலும் 25-03-99 அன்று விசுவமடுவிலும் அரங்கேற்றப்பட்டன.

## யாழ்ப்பாணக்கல்லூரி புதிய ஆளுனர் சபை

29-03-99 நடைபெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுனர் சபையின் வருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய வருடத்திற்கான உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: அதி வண. கலாநிதி S. ஜெபநேசன்
துணைத்தலைவர்:
டாக்டர் தயாளன் அம்பலவாணர்
செயலாளர்:
கலாநிதி(செல்வி) C.V. செல்லையா
பொருளாளர்:
திரு V. மித்திரரஞ்சன்
முகாமையாளர்:
திரு C. ஜெயரத்தினம்

## பிற நாடுகளில் தமிழ் வளர்ச்சி கருத்தரங்கு

பிறநாடுகளில் தமிழ் வளர்ச்சி பற்றிய கருத்தரங்கு இம் மாதம் இறுதியில் சென்னை தரமணி தமிழாய்வு மன்றத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுவதற்காக பேராசிரியர் கா சிவதம்பி இப்பொழுது இந்தியாவிலே தங்கியுள்ளார் யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் இதிலே கலந்து கொள்வார்களெனத் தெரிகின்றது.

## வாலிபர் பாசறை

தென் இந்திய திருச்சபை மத்திய கர்னாடக ஆதினம் தனது வருடாந்த வாலிபர் பாசறையை இம்மாதம் 5ம் திகதி தொடக்கம் 7ம் திகதி வரை மங்களூரில் உள்ள சகோதய நடு நிலையத்தில் நடாத்தினார்கள்.

## இலங்கையில் பேராயர்களின் ஞானவொடுக்கம்

தென்னிந்திய திருச் ... பேராயர்கள் 21 பேருக்கு ... மாதத்தில் ஞானவொடுக்கம் நடத்தப்போவதாகத் தலைமைப் பேராயர் மகாகனம் வில்லியம் மோசஸ் தெரிவித்துள்ளார்: இந்த ஞானவொடுக்கம் கொழும்பில் நடைபெறுமெனவும் தெரிவித்துள்ளார்: இந்த ஞான ஒடுக்கத்தின் இடவசதி போக்குவரத்து வசதி என்பனவற்றைக் கவனிக்க எமது பேராயர் ஒரு குழுவை நியமிப்பார் எனத் தெரிகின்றது.

## 21ம் நூற்றாண்டின்..

அறிவை ஊட்டி, மக்களை நாகரீகமயமாக்கியது. டாக்டர் பீ. டி. தேவானந்தன் கூறுவது போன்று "இப் புதயுகத்தின் நடப்புகளிலே கடவுளின் வாக்குறுதிகள் நிறைவேறிக்கொண்டு வருகின்றன. ஆம் கிறிஸ்தவப் பெருநம்பிக்கையோடு வாழ்கின்றவர்கள் இதை புரிந்து கொள்ள முடியும். புது யுகத்தின் வரலாறு இறந்த காலத்தின் நிறைவேற்றமன்று. அது வருங்காலத்தினைப் பற்றிய முன்னுணர்ச்சி அனுபவம்''

வளர்ந்து வரும் விஞ்ஞான யுகத்தில் எத்தனையோ தீமைகள் இருக்கின்றன போதிலும் மனித மேம்பாடு மனித நாகரிகத்திற்கு அவசியமான வளர்ச்சிகளை இன்று உலகம் விஞ்ஞான வளர்ச்சியில் காண்கின்றது. ஆகவே சமயங்கள் இன, நிறை, மொழி, சமயம் இவைகளுக்கு அப்பால் நின்று மனித மேம்பாடு மனித நாகரிகம் மனித வளம் இவைகளுக்காய் உழைக்கின்ற போதே மனிதஇனத்திற்குள் சமதர்மம் பேணப்பட முடியும். சமதர்மங்களை கட்டிக் காக்கும் சமயங்களே உலகத்தில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கும் காரணிகளாக தொடர்ந்தும் இருக்குமானால் 21ம் நூற்றாண்டில் அனேக மக்கள் சமயமற்றவர்களாய் நாஸ்திகர்களாய் மாறப் போவது உண்மையாகும்.

"இன்றைய உலகம் மனித வாழ்வில் ஒரு புதிய கட்டத்தை அடைய, ஓர் சம நிலைக்கு வர தாகின்றது. ஆழமான ஆன்மீக வாழ்க்கையையும் அறநெறி பெலனையும் தன்னகத்தே பெற்ற மனிதன் மட்டுமே இக்கால சவால்களை ஏற்கமுடியும் ஆன்மீக நிலையற்ற பொருளாதார வளர்ச்சி பெருங்கேடு விளைவிக்கும்'' என்று கூறினார் பண்டிதர் ஜவஹர்லால் நேரு.

யோசுவா சிவஞானம்

## தெல்லிப்பளையில் வழிபாடு

1991ம் ஆண்டுக்குப் பின்னர் தெல்லிப்பளை தென் இந்தியத் திருச்சபை தேவாலயத்தில் வழிபாடு சென்ற ஞாயிற்றுக் கிழமை அதாவது உயிர்த்தெழுந்த திருநாளன்று மீண்டும் நடைபெற்றது. தெல்லிப்பளை திருச்சபையார் 65 பேர் விசேட வாகனம் மூலம் தெல்லிப்பளை கூட்டுறவு வைத்திய சாலை வரை சென்றனர்: அங்கிருந்து இராணுவ வாகனம் மூலம் தெல்லிப்பளை ஆலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு காலை 9 மணிக்கு நற்கருணை வழிபாட்டினை வண. P. J: சூரியகுமார், வண. A. S. தேவகுணானந்தன், அருட் சகோதரி டெய்சி ஆசீர்வாதம், இறையியல் கல்லூரி மாணவன் செ அரைரத்தினம் ஆகியோரின் ...வியுடன் நடத்தினார். நற்கருணை வழிபாட்டில் 39 பேர் பங்குபற்றினார்கள். வண. A. S. தேவகுணானந்தன் அருளுரை ஆற்றினார்.

## M. Th அனுமதி பெற்றார்

கொழும்புத்திருச்சபை உதவி ஊழியன் வண ஈனொக் புனிதராஜா மதுரை தமிழ்நாடு இறையியல் கல்லூரியின் சமூக ஆய்வுத் துறையில் முதுமாணிப்பட்டப் படிப்பினைத்தொடருவதற்காக அனுமதி பெற்றார் இவர் ஜுலை மாத முற்பகுதியில் மதுரை செல்வாரெனத் தெரிகின்றது.

## மட்டக்களப்பில் புதிய ஊழியன்

மட்டக்களப்பில் புதிய ஊழியர் பின்வரும் அழப்படையில் சேவை புரிவார்களனத் தெரிகின்றது.

ஊரணி மற்றும் பிரதேச ஊழியன் வண எஸ் ஜெயநேசன்
இறாலோடை வண செபஸ்தியன் அன்ரனி இவர் கிரானில் தங்கியிருப்பார். கித்துல் திரு அர் ஜுனன் நைங்ஸ் ஊரணி உதவியாளர்மற்றும் சிறுவர் இல்லம் சகோ ரீ தேவசகாயம்

## CCA மிஷன் நற்தூதுப்பணி செயலர் விஜயம்

ஆசியதிருச்சபைச் சம்மேளனத்தின் மிஷன் நற்தூதுப் பணிக்கான செயலாளர் வண கலாநிதி D. S தியாகராசா இம் மாதம் 8ம் திகதி தொடக்கம் 14ம் திகதி வரை கொழும்பில் தங்கியிருந்தார். தலைமைப் பேராயரின் விஜயத்தை முன்னிட்டே அவர் வந்திருந்தார்.

## மறுமைப் பிரவேசம்

திருமதி R F ஞானசேகரம் 08 04 99 வியாழக்கிழமை மறுமைக்குள் பிரவேசித்தார். இவர் திரு ஆனந்தகுமார் திருமதி இந்திரா குணநாயகம் திருமதி லலிதா சாமுவேல் திரு சுகுணகுமார் திரு கருணகுமார் ஆகியோரின் தாயாரும் கலஞ்சென்ற திரு C A ஞானசேகரத்தின் அருமை மனைவியுமாவர். நல்லடக்க ஆராதனை வண T ஜெயச்சந்திரன் வண A ஜெபக்குமார் ஆகியோரினால் 10 04 99, 24 ரட்ணகார் இடத்திலுள்ள அவரின் இல்லத்தில் நடத்தப்பட்டு உடல் தகனக்கிரியைசட்காக கல்கிசை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

## திரு விமலன் ஆஷ்பெரி வழக்கில் தீர்ப்பு

திரு நிமலன் ஆஷ்பெரி வழக்கு இம் மாதம் 19ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டு இறுதி தீர்ப்பு வழங்கப் பட்டது. இவ் வழக்கில் திரு ஷேர்லி பெர்னான்டோ என்ற ஜனாதிபதி சட்டத்தரணி இலவசமாகத் தமது சேவையை திருச்சபைக்கு வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருமணம்

தென் இந்திய திருச்சபை சினட் மகா சபையின் வாலிபர் சம்மேளன செயளாலர் விக்டர் வினோத் அவர்கள் சென்ற மாதம் பிரபல திருச்சபை பாடகியான செல்வி மொலி அவர்களை திருமணம் செய்து கொண்டார்.

சினட் மகா சபையின் காரியாலயத்தில் வரவேற்பாளராகக் கடமையாற்றிவரும் திருநிறை செல்வி பியூலா அவர்கள் திரு சந்திரமோகன் அவர்களை சென்ற மாதம் திருமணம் செய்து கொண்டார்.

## கொழும்பில் திடப்படுத்தல் ஆராதனை

கொழும்பு தென்னிந்திய திருச்சபையில் 18-04-99 ஞாயிற்றுக்கிழமை ஒரு திடப்படுத்தல் ஆராதனை நடைபெற்றது. அவ்வாரதனையில் 28 பேர் சபையின் பூரண அங்கத்தவர்களாகத் திடப்படுத்தப்பட்டனர். வண T ஜெயச்சந்திரன் அபேட்சகர்களைப் பேராயர் முன் நிறுத்தினார். 350 பேருக்கு அன்று திடப்படுத்தல் பெற்றவர்களின் பெற்றோர் காலையுணவு வழங்கி மகிழ்ந்தனர்.

## திடப்படுத்தல் ஆராதனை

வட்டுக்கோட்டை திருச்சபையில் திடப்படுத்தல் ஆராதனை உயிர்த்தெழுந்த ஞாயிறன்று பேராயர் கலாநிதி S ஜெபநேசன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது இவ்வாராதனையில் 26 பேர் திடப்படுத்தலுக்கு கூடாக திருச்சபையின் பூரண அங்கத்தவர்களாக்கப் பட்டார்கள் ஆராதனை முடிவில் அனைவருக்கும் காலை உணவு வழங்கப்பட்டது.

## புதிய நூல்

பல்கலைக்கழகம் நடத்துபவர்களுக்கும் கல்லூரிகளை நடாத்துபவர்களுக்கும் உதவும் பொருட்டு Higher Education vision and Mission for 21st century என்ற நூலினை மதுரை டோக் சிமாட்டி கல்லூரியினர் வெளியிட்டுள்ளனர். இந்த நூல் 353 பக்கம் கொண்டது கலாநிதி நிர்மலா ஜெயராஜா அவர்களினாலே அச்சு வாகனம் ஏற்பட்டுள்ளது. இதன் விலை 125 ரூபா என குறிப்பிடப்பட்டுள்ளது.

உதயதாரகை

23- 04- 1999



# 21ம் நூற்றாண்டின் விஞ்ஞான வளர்ச்சியில் சமயங்கள்

## தாரகை ஒளி

இரண்டு சிறகுகளினாலே மனிதன் உலகப்பிரகாரமான காரியங்களிலிருந்து மேலெழுந்து பறக்கு முடியும் அவைதாம் எளிமை, தூய்மை

தொமஸ் செம்பிஸ்

## வெள்ளி விழாக் காணும் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு இந்த வருடம் அக்டோபர் மாதம் 4ம் திகதி இருபத்தைந்து வருடம் பூர்த்தியாகின்றது. கடந்த 25 வருடங்களில் இந்த பல்கலைக்கழகம் பல விதமான அனுபவங்களை தாண்டி வந்திருக்கின்றது. அரசியல் குழப்பங்களினால் பல மாதங்கள் மூடப்பட்டும் இருந்தது. ஆனாலும் இன்று தொடர்ந்து நடைபெற்று வருவது நம் அனைவருக்கும் உவகை அளிக்கின்ற செய்தியாகும்.

1959 ம் ஆண்டு இப் பல்கலைக்கழகத்தில் ஒரு கிறிஸ்தவ நாகரிகத்துறை தொடக்கப்பட்டது. இன்று பல மாணவர்களும் மாணவிகளும் கிறிஸ்தவ நாகரிகத் துறையின் சிறப்பு பட்டதாரிகளாக இன்று அரங்கேறியுள்ளனர்.

1974 ம் ஆண்டு யாழ்ப்பாணக்கல்லூரியையும் பரமேஸ்வரா கல்லூரியையும் சுவீகரித்தே அரசினர் இப் பல்கலைகழகத்தை உருவாக்கினார்கள் அப்பொழுது. யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ்ப்பாண பல்கலைகழகத்துக்கும் இடையில் உறவுகள் சரியாக இருக்கவில்லை. 5 வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரியும் யாழ்ப்பாணப் பல்கலைகழமும் ஒன்றுபட்டு உழைப்பதனைக்காணலாம்.

யாழ்ப்பாணத்தின் உயர் கல்வி வரலாற்றிலே வட்டுக் கோட்டைக்கு ஓர் முக்கியமான இடம் இருக்கின்றது. எந்த உயர்கல்வி முயற்சி வெற்றி அடைந்தாலும் யாழ்ப்பாணகல்லூரிச் சமுதாயம் அதைக்கண்டு குதூகலம் அடைகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் மதச்சார்பின்மைக்கு ஓர் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. இப்படியாக மதசார்பின்மையை தொடர்ந்து வளர்த்துவரும் துணை வேந்தர்களுக்கும் மூதவை உறுப்பினர்களுக்கும் பேரவை உறுப்பினர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

இன்று நமது நாட்டு மக்கள் உலகின் பல பாகங்களிலும் பரந்து வாழ்கின்றனர் உலகின் தலைசிறந்த பல் கலைகழகங்களில் படிக்கின்ற வாய்ப்பு அவர்களுக்கு கிட்டுகின்றது. ஆனால் இன்று தமிழ் பிரதேசத்தில் வாழ்கின்ற சாதாரண மக்களுக்கு கிடைத்திருக்கின்ற ஒரே உயர் கல்வி நிறுவனம் யாழ்ப்பாண பல்கலைக்கழகமேயாகும். உலகின் பல இடங்களில் வாழ்கின்ற தமிழ் மக்கள் இதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

வெளிநாட்டில் உள்ள சிலர் யாழ்ப்பாண பல்கலைகழகம் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குதில்லை. என குறுகின்றனர். இது ஏழை மக்களின் கல்வியின் அவசியத்தை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை என்பதையே காட்டுகின்றது. 25 ம் வருடத்தை பூர்த்தி செய்யும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை வாழ்த்தும் அதே நேரத்தில் பிறநாடுகளில் வாழும் தமிழ் அன்பர்களும் அதன் வளர்ச்சிக்கு உதவி புரிய வேண்டும் என்று கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

## யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தின் பிரேரணை

31 - 03 - 99 அன்று நடைபெற்ற யாழ். ஒன்றியத்தின் வருடாந்தக் கூட்டத்தில் பின்வரும் பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

"இலங்கையிலே தேசிய கிறிஸ்தவ சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் சகல சபைகளும் ஒருமைப்பட வேண்டும்" என்ற அழைப்பு விடுத்தமைக்காக இந்த ஒன்றியம் பேராயர் கெனத் பெனான்டோவுக்கு நன்றி தெரிவிக்கின்றது. அத்துடன் தேசிய கிறிஸ்தவ மன்றத்திலே அங்கத்துவம் வகிக்கும் சகல சபைகளும் பல்கலைக்கழக குருத்துவப்பணி, யாழ் கிறிஸ்தவ ஒன்றியம், இறையியல் கல்வி என்னும் முயற்சிகளில் மேலும் ஐக்கியப்பட்டு உழைக்க வேண்டும் என்னும் கோரிக்கை விடுகின்றது.

## ஒருமைப்பாட்டு முயற்சிகள்

யாழ் கிறிஸ்தவ ஒன்றியம் சகல திருச்சபைப் பிரதிநிதிகளையும் இணைத்து இரண்டு கூட்டங்களை மே மாதம் 8ம் திகதி அனைத்துக் குருமார்களுக்கும், மே மாதம் 22ம் திகதி அனைத்துப் பொது நிலையினருக்கும் முழு நாள் கூட்டங்களையும் கலந்துரையாடல்களையும் நடாத்தவுள்ளது.

## பேராயர் கெனத் பெனான்டோ யாழ் வருகை

கொழும்பு அங்கலிக்கன் திருச்சபைப் பேராயர் அதி வண கென்னத் பெர்னான்டோ ஏப்ரில் மாதம் 9ம் திகதி தொடக்கம் 12ம் திகதி வரை யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்டார். ஏப்ரல் மாதம் 10ம் திகதி நடைபெற்ற வண. P நேசகுமாரின் திருமணத்தில் பங்கு கொண்டு சிறப்பித்தார்.

## வன்னேரிக்குப் புலம்பெயர்வு

வன்னிப் பிரதேசத்தில் நடைபெற்ற போர்க்கோஷம் II நடவடிக்கையைத் தொடர்ந்து மல்லாவியிலுள்ள சிறுவர் இல்லம், பகற் பராமரிப்பு நிலையம், தேவாலயம் குருமனைகள் என்பன வன்னேரிக் குளத்திற்கு மாற்றப்பட்டுவிட்டதாக வன்னிப் பிரதேசத் திட்டமிடல்ப்பாளர் திரு எஸ். இரத்தினம் அறிவிக்கின்றார்.

மனித இனம் தோன்றிய காலம் முதல் கடவுள் நம்பிக்கையும் இருந்து வருகின்றது. கடவுள் நம்பிக்கையில் இருந்து மனிதன் சில தருணங்களில் விலகினாலும் அதில் இருந்து பூரணமாக விலகுதல் அவனுக்கு இயலாத காரியமாகும். ஏனெனில் கடவுள் நம்பிக்கையே மனிதனின் எதிர்கால நம்பிக்கையின் அடிப்படையாகும் ஆனால் மனித இனம் தோன்றிய காலத்தில் இருந்து கடவுள் நம்பிக்கை இருந்தாலும், அந்நம்பிக்கைக்கு எதிரான நாத்திக பார்வையும் மனிதனிடத்தில் இருந்தது. கடவுள் நம்பிக்கை மூடநம்பிக்கை என்றும் அந்த நம்பிக்கையில் இருந்து விடுபட்டு அறிவு பூர்வமாக சிந்தித்து வழவேண்டும். என்ற போதனைகள் பலரால் போதிக்கப்பட்டும் வந்துள்ளன. ஆகவே விஞ்ஞான வளர்ச்சியடைவதுபோல சமயங்கள் வளர்ச்சி அடையவில்லை என்று கூறுவார்கள்.

ஆனால் சமயங்களும் படிப்படியாக வளர்ச்சியில் ... அவன் ... பார்வையுடையவனாய் இருந்திருக்கிறான் என்பது வரலாறு கூறும் உண்மையாகும். இதனை மூன்று படிமுறை வளர்ச்சியில் காணலாம்.

### 1 குழு நிலை அமைப்பின் சமயநம்பிக்கைகள்

பழங்குடி மக்களுக்கு சமயமும் மாந்திரிகமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்திருந்தது ஆறு, மலை, மழை, முகில், நெருப்பு, இடி, போன்ற இயற்கை பொருள்களுக்கு இறைத்தன்மை கொடுத்து அவற்றை பணிந்து கொள்ள முயன்றனர். முற்பிதாவாகிய ஆபிரகாமின் முன்னோர் சந்திர கடவுளை வழிபட்டார் என்பதற்கூடாக பழங்கால மேதகாசிய சமயங்களிலும் இத்தகைய இயற்கை வழிபாடுகள் அமைந்திருந்தன எனக்கண்டுகொள்ளலாம்.

### 2 தேசிய சமுதாய அமைப்பின் சமயநம்பிக்கை

மனிதன் நாடோடி வாழ்க்கையில் இருந்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழவும் தொழில்களை செய்துகொள்ளவும். அவன் முயன்ற பின்பு அவனது அறிவு வளர்ச்சியில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அவனுக்குள் தனது குடும்பம், தனது சமுதாயம், தனது இனம், தனது நாடு, என்கின்ற தேசிய உணர்வு ஏற்பட ஆரம்பித்தது. இந்த தேசிய உணர்வு அவனது சமய நம்பிக்கையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. பல கடவுள்கள் உள்ள சமுதாயம் ஒருமைப்பாட்டில் தேசிய உணர்வில் வாழ முடியாது. என உணர்ந்த மனிதன் ஒரே கடவுளை அறிந்து கொண்டான். இஸ்ரவேல் மக்களின் பன்னிரண்டு கோத்திரங்களும் தேசிய உணர்வுக்குள் கொண்டுவந்தது யாவே வணக்கமேயாகும். என்பது திருமறை கூறும் உண்மையாகும்.

### 3 உலக சமுதாய அமைப்பின் சமய நம்பிக்கை

ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட தொழில்களுடன் வாழ்ந்த மனிதன் தனது ஏனைய தேவைகளை நிறைவேற்ற ஏனைய மக்கள் வாழும் பிரதேசத்திற்கு செல்லவும் பொருட்களை பண்டமாற்றம் செய்யவும் பழகிகொண்டான். இதனுடைய வளர்ச்சிப் போக்கில் ஏனைய நாடுகளைக் கைப்பற்றவும் அங்கே தமது கலாசாரம் தமது சமயங்களை போதிக்கவும் அவன் முயற்சி செய்தான் இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட சமயம் குறிப்பிட்ட இனத்தின் சமயமாக இல்லாமல் பல இனங்களின் சமயமாகி உலக சமயமாக மாறுகின்றது. உதாரணமாக தத்துவ ஞானியான அரிஸ்டோட்டலின் "ஒரே மனித இராஜ்ஜியம்" என்கின்ற போதனையில் கவரப்பட்ட அவரது மாணவனான மகா அலெக்சாந்தர் அனேக நாடுகளைப் கைப்பற்றவும் தனது கலாசாரம், தமது சமயத்தை பரப்பவும் முயன்று பண்படுத்தப்பட்ட உலகம் (Hellenistic world) என்ற உலகை உருவாக்கினான். என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சமயங்களின் படிப்படியான வளர்ச்சிப் போக்கு ஏனைய நாடுகளை கைப்பற்றவும் ஏனைய இனங்களை அடிமைப்படுத்தவும் மக்களைத் தூண்டியுள்ளது. கடவுளின் பெயரால் நீண்ட காலமாக யுத்தங்கள் நடந்து வந்துள்ளன. இதனால் ஏற்பட்ட உயிர் உடமை அழிவுகள் விலைமதிக்க முடியாதவைகள் இப்படியான அழிவுகளுக்கும் அடக்கு முறைகளுக்கும் கடவுள்தான் காரணம் அல்லது கடவுளது பெயரால் அடக்கு முறைகள் கட்டவிழ்த்தப்படுவது கண்கூடு இன்று சமயத்தின் பெயரால் வட அயர்லாந்து, இந்தோனேசியா, கிழக்கு திமோர், ஆப்கானிஸ்தான், இஸ்ரேல், பாலஸ்தீனா, இந்தியா, ஆகிய நாடுகளில் மனித உயிர்களுக்கு அழிவு நடந்து வருகின்றதை நாளேடுகளில் நாள்தோறும் காண்கின்றோம்.

உலக வரலாற்றில் 16ம் நூற்றாண்டு முதல் 20 நூற்றாண்டு வரை மனிதன் அறிவியலில் விஞ்ஞானத்தில் தொழில்நுட்பத்தில் முன்னேறிய மாபெரும் நூற்றாண்டுகள் 16ம் நூற்றாண்டுக்கு பின்பே மனிதனின் புதிய கண்டுபிடிப்புகள் அதிகமாகின சமயத்தின் பெயரால் நடைபெறும் அடக்கு முறைகளை மனிதன் கண்டிக்க தொடங்கினான். சமய மூட நம்பிக்கை, மனித முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கின்றது எனக்கூறி கால்மாக்ஸ், பிரடரிக் ஏங்கல்ஸ், லெனின், மாசேதுங், ஈ. வெ. பெரியார் போன்றவர்கள் குரலெழுப்பினார்கள். குறிப்பாக கால்மாக்சின் போராட்டம் இன்று உலகில் அனேக மக்களைக் கவர்ந்து விட்டது எனக் கூறலாம்.

ஆனால் 19ம் 20ம் நூற்றாண்டுகளில் திருச்சபை விஞ்ஞான வளர்ச்சிக்கும் அறிவியல் முன்னேற்றத்திற்கும் முன்னின்று உழைத்துள்ளது. ஐரோப்பிய அமெரிக்க கண்டங்களில் இருந்து புறப்பட்ட மிஷனரி இயக்கங்கள் மக்களுக்குக்கல்வி

(2ம் பக்கம் பார்க்க)

# UDUVIL

"O Uduvil dear Uduvil
Our praise to thee we render
Bright days and years within thy walls
Live in our memory tender"

Uduvil Girls' College is now 175 years old. we are happy that arrangements are being made to celebrate this in a fitting manner. Many years ago a loyal old girl wrote –

"In thy sunny halls our days are blessed
by thy spirits gentle power
And we feel thy love for us expressed
Like the fragrance of a flower,
So we'll try to make thy dreams come true
In our lives of service fair
Where'er we go that all many know
And may praise thee everywhere"

Being the oldest female boarding school in the East Uduvil occupies an important place in the history of education in Asia. Eevnthough there were highly educated Tamil woman in the first and second centuries after the 10th century there grew up a feeling among the Tamils that it was not proper for females to be educated. Female education therefore was totally neglected both in India and in Sri Lanka. In 1824 Mrs. Harriet Winslow opened her boarding school at Uduvil, which at that time was one of the most thickly populated villages in the north. It was rather difficult for Mrs' Winslow to find students. Incentives like clothes, dowry securing husbands, giving admission to brothers at Batticotta Seminary were held forth in order to attract students to the school. The girls who were given education under such difficult conditions took the torch of learning not only to the houses in Jaffna but also to the palace in Indian Subcontinent. Caroline Chester who had her education at Uduvil founded a school for girls in Nellore in, Andra Pradesh. Anne Mann another distinguished old girl was sent to teach the princess of Ramnad State; Hamet Ambrose established a school for girls in Jaffna Town. These great events had taken place before the establishment of other female schools in Sri Lanka.

We salute Uduvil for its past. During the past 175 years a series of remarkable women guided the destiny of this great institution. Mrs Harriet Winslow Miss Eliza Agnew, Miss Susan Howland, Miss Lulu Bookwalter, Miss Hudsan Paramasamy, Mrs Saraswathy Somasundaram and Dr. Miss C. V. Selliah have all contributed to maintain the high academic standards of Uduvil. May thy vision of the Missionary Principals continue to inspire Uduvil The Vision had been summed up beautifully by Miss Lulu Bookwalter. (Principal 1913 — 1941)

"What we have endeavoured to teach at Uduvil, with the help of the teachers here, is not alone that freedom which would make it possible for the girls to go out of the front gate all alone, but it is the freedom which we feel within ourselves, the freedom of the inner spirit, the freedom of the mind, that freedom which comes to the mind through a knowledge of truth".

The task of Uduvil in our troubled homeland is tremendous importance. May Uduvil cotinue to be a beacon light for the Tamil women in these days of anxiety and confusion.

## Servak Sam....

suffered severe damage, almost amounting to virtual destruction, as a result of explosives trageted on the Ashram, on various numerous different days. The explosives that had rained on the Ashram were intended to kill everyone on the Ashram premises, erase the Ashram from the face of the earth. It could not destroy the Ashram. God provided the resources, and helped Sam Annan to replace the perished buildings with more suitable structures, better equipped to meet the future role of the Ashram, and the needs of Church and the people, after Sam Annan completed and I concluded his allotted days of human existence.

Sam Annan would have died a happy man, conscious that he was departing from this life with nothing left unfinished. The reality of the cruel war encircling him and disruption and dislocation of all aspects of life around him, provided him with unparalleled and unprecedented challenges, as he travelled between Kiran (in the Batticaloa District) and Maruthanamadam (in the Jaffna Peninsula), invariably via Colombo, ministering to the needs of the several thousands of people who saw in these Ashrams, more than a way of life, and a place of worship. These Ashrams served as a place of refuge for the many thousands fleeing from their homes, with nothing on themselves. Through prayer and dedicated work, Sam Annan provided leadership, hope, and inspiration, that the trials they endured would eventually pass away. Unfortunately, none of those problems ever diminished. Their difficulties and hardships continued to intensify, as those in power relentlessly persisted in seeking a military solution by escalating the use the latest and the most expensive techniques of military warfare and might, to a try and settle a major festering political problem. Food itself had become a very scarce commodity. Travel was full of perils. Medicines and medical help were virtually nonexistent. Communications had completely broken down, and were totally disrupted. Work had been rendered impossible in the environment of military and security check points all over the place. Everybody who had the means to escape overseas had deserted the country, to seek any from of life available in any country abroad. This took a heavy toll on Sam Annan's deteriorating health as a diabetic since youth. His failing sight had been partially restored through excellent cataract surgery done in Colombo, on both his eyes. The older and more feeble he became, and the greater were the demands that were placed on him. He had to lead support, counsel and provide for others He never complained of lack of help or support. He trusted in God to provide. He was. Never left disillusioned or disappointed.

## Victor A Benjimin Australia

He died at the age of 75 years.

I got to known Sam Alfred around 1942 or 1943 He was a very quiet and intelligent schoolboy then. We had no idea then that he would become a clergyman When he joined the Ashram, he was looked upon as the most sickly person, and least likely to live and work long. Strangely, he outlived both 'Periya annan' and 'Sinna annan' and lived much longer than either of his two colleagues. 'Periya annan, Sinna annan and Sam annan formed the three pillars on which the Ashrams stood. Sinna annan died in 1970, while Periya annan died a few years later, leaving Sam annan to carry on with the expanding role and work of the Ashrams.

Sam annan was always a very humble, uncompromising, Jaffna man. He always acknowledged that Periya annan and Sinna annan were greater men than he was, and that he followed in their illustrious footsteps.

I said farewell to Sam annan at Maruthanamadam in March 1981, just before I left Jaffna. Thereafter, God made it possible for Sam annan to miraculously visit me at Goodooga, in the remote and isolated outback location in the far North-West of New South Wales in Australia, in October 1994. He stayed four and a half days in Goodooga, and visited Weilmoringle, a much smaller aboriginal hamlet about 80 kilometres away, along a black soil dirt track, West of Goodooga. At Weilmoringle, Sam annan spent about two hours at their school, talking to the single teacher and all the students, who were only ten in number, on that day. Nine of those ten school children were of aboriginal descent. He understood and absorbed a little bit of aboriginal culture, their expectations, and their contentment, from the most interesting dialogue with these children. He also visited the home of an outback grazier family in Weilmorigle, and chatted at length with Ron and Merri Gill over afternoon tea Sam annan and Gill family were mutually absorbed, enchanted, and fascinated with each other. In Goodooga, Sam annan conducted a church service attended by eight people, which formed the full congregation, in a church where only one service is held each month There, he met two grazier families in Goodooga, the McCumstie family and Jamie Richmond. Intrigued by realities of life on the dry arid bush in the Australian outback, Sam wanted to see life on the land He was taken around to all nooks and corners on his vast property by Jamie Richmond. who had several thousands of sheep to look after. Sam annan spoke to several aboriginal Australians while in Goodooga, and tried to understand the belief among the aboriginals of life after death. This made him want to visit the local Goodooga cemetery, where he took over an hour, looking at the tombstones and graves. He saw the contrasts between life in the big Australian cities and in the Australian outback. He was glad that he had been able to see my working environment in the twilight of my life, and share a few days with me and my wife, in our modest simple home in Australia

It is not without significance that the rededication service at the Christa Seva Ashram at Maruthanamadam took place one day before Sam Annan's death. God brought from Colombo and the South, a number of religious dignitaries including Bishops, and other important persons as privileged visitors to participate in the service of rededication of the Ashram in Jaffna, so that they would see the finished work of Sam Annan, and witness to that inspiring event, and to the life of a great man. We thank God for Sam annan's life and work.

Registered as a News Paper at the G P. O. Sri Lanka- News Paper Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press. Diocesan Complex Vaddukoddai on Friday the of 23rd April 1999 by Rev G. Nadaraja Diocesan office. Vaddukoddai.